# வாசிப்புப் பழக்கத்தை அதிகப்படுத்த வேண்டும்

## த.ஸ்டாலின் குணசேகரன் பேச்சு



விழாவில், பேசுகிறார் மக்கள் சிந்தனைப் பேரவைத் தலைவர் த.ஸ்டாலின் குணசேகரன். உடன், கல்லூரித் தலைவர் எஸ்.வி.பாலசுப்பிரமணியம், ஆலோசகர் எம்.பி.விஜயகுமார், தலைமை நிர்வாகி ஏ.எம்.நடராஜன் உள்ளிட்டோர்.

**சத்தியமங்கலம், மார்ச் 16:** நூலகங்களைப் பயன்படுத்தி வாசிப்புப் பழக்கத்தை மாணவர்கள் அதிகப்படுத்த வேண்டும் என ஈரோடு மக்கள் சிந்தனைப் பேரவைத் தலைவர் த.ஸ்டாலின் குணசேகரன் கூறினார்.

சத்தியமங்கலம், பண்ணாரி அம்மன் தொழில்நுட்பக் கல்லூரியில், மக்கள் சிந்தனைப் பேரவையின் கிளை துவக்க விழா திங்கள்கிழமை நடைபெற்றது.

விழாவிற்கு, கல்லூரித் தலைவர் எஸ்.வி.பாலசுப்பிரமணியம் தலைமை வகித்தார். மக்கள் சிந்தனைப் பேரவைத் தலைவர் ஸ்டாலின் குணசேகரன் பேரவையின் கிளையை துவக்கி வைத்தார்.

பின்னர், அவர் பேசியதாவது: பேரவை துவக்க நாளிலேயே 1184 உறுப்பினர்கள் பேரவையில் சேர்ந்தது அவர்களின் ஆர்வத்தைக் காட்டுகிறது. இதில், மாணவர்களுக்கு சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டு பேச்சாளர்களாகவும், எழுத்தாளர்களாகவும் தலைமைப் பண்புடையவராகவும் உருவாக்கப்படுவார்கள். மாணவர்கள் நூலகத்தை முழுமையாகப் பயன்படுத்தி வாசிப்புத் திறனை அதிகப்படுத்த வேண்டும். நேர்மை, எளிமை, திறமை என்ற 3 தாரக மந்திரங்கள் வாழ்க்கையின் வெற்றிப் படிக்கட்டுகள் என்றார். நிகழ்ச்சியில், ஆலோசகர் எம்.பி.விஜயகுமார், பேராசிரியர்கள் அ.ஜெகதீசன், ஜெ.பி.வந்தனா உள்பட மாணவ, மாணவிகள் கலந்துகொண்டனர்.

**Dinamani - 17.03.2015**